# சிலுவையின் அருகில் பெண்கள்

*சிலுவையில் கிறிஸ்துவின் முதல் மூன்று மணி நேரங்களில், யோவானின் பட்டியல்களின்படி, பின்வரும் பெண்கள், ''சிலுவை யினருகே'' நின்றிருந்தனர்: "அவருடைய தாயும் [மரியாளும்], அவருடைய தாயின் சகோதரி கிலெயோப்பா மரியாளும், மகதலேனா மரியாளும்" (யோவா. 19:25). "கிலெயோப்பா மரியாள்" என்பவள் இயேசுவின் தாயினு டைய சகோதரியாயிருக்கச் சாத்தியக்கூறுள்ளது, ஆனால் அநேகமாக நாம், இவ்விருவரும் [கூடப்பிறந்திராத] தனித்தனி நபர்கள் என்று புரிந்துகொள்ள வேண்டியுள்ளது. J. W. மெக்கார்வீ அவர்கள், பின்வருவன உட்பட இந்த முடிவிற்குப் பல்வேறு காரணங்களைப் பட்டியலிடுகின்றார்:[1] (1) இரு சகோதரிகளுக்கு - மரியாள் என்ற - ஒரே பெயர் இருத்தல் என்பது சாத்திய மானதல்ல. (2) "யோவான் இரு ஜோடிப் பெண்களின் பெயர்களைத் தருகின்றார், ஒவ்வொரு ஜோடியும் 'and' என்ற சொல்லுடன் இணைக்கப் பட்டுள்ளன. முதல் ஜோடி இயேசுவின் நெருங்கிய உறவினர்களாயிருந் தனர், இந்த ஜோடி பெயரின்றி குறிப்பிடப்பட்டுள்ளது, இது பெயர்கள் தரப்பட்டுள்ளதும் இயேசுவுக்கு உறவினரல்லாததுமான இன்னொரு ஜோடிக்கு இணையாக உள்ளது."[2] (3) மரியாளின் சகோதரியைப் பெயர் கூறாது விட்டுவிடுதல் என்பது, தமது குடும்பத்தில் யாரையும் பெயர் கூறாது விட்டுவிடும் யோவானின் பழக்கத்திற்கு இசைந்ததாக உள்ளது. (யோவான் தம்மையோ, தமது சகோதரர் யாக்கோபையோ அல்லது தமது தாயையோ ஒருக்காலும் பெயர் குறிப்பிட்டதில்லை; அவர் தமது சித்தியாக இருந்திருக்கக் கூடிய இயேசுவின் தாயையும் ஒருக்காலும் பெயர் குறிப்பிட்டதில்லை.) யோவான் நான்கு பெண்களைக் குறிப்பிட்டார் என்று நாம் முடிவு செய்கின்றோம்.*

*சிலுவையில் இயேசுவின் கடைசி மூன்று மணி நேரங்களில் - அதாவது, இயேசுவின் தாயார் அவ்விடத்தை விட்டு வழிநடத்திச் செல்லப்பட்ட பின்பு (யோவா. 19:26, 27) - மூன்று பெண்கள் கொண்ட ஒரு குழுவானது இன்னமும் சிலுவையை "தூரத்திலே நின்று பார்த்துக் கொண்டிருந்தார்கள்" (மத். 27:55; மாற். 15:40). இந்தப் பெண்களைப் பற்றி மத்தேயுவின் பட்டியலானது பின்வருமாறு உள்ளது: "அவர்களுக்குள்ளே மகதலேனா மரியாளும், யாக்கோபுக்கும் யோசேக்கும் தாயாகிய மரியாளும், செபெதேயுவின் குமாரருடைய தாயும் இருந்தார்கள்" (மத். 27:56). மாற்கு, "மகதலேனா மரியாளும், சின்ன யாக்கோபுக்கும் யோசேக்கும் தாயாகிய மரியாளும், சலோமே என்பவளும்" என்று பட்டியலிட்டார் (மாற். 15:40). மத்தேயு மற்றும் மாற்கு ஆகியோரின் பட்டியலில் உள்ளவற்றில் இரு*

பெயர்கள் ஒன்றுபோலுள்ளது: மகதலேனா மரியாள் மற்றும் (சின்ன) யாக்கோபு, யோசேப்பு (யோசே) ஆகியோரின் தாயாகிய மரியாள். இது, மாற்குவின் பட்டியலில் உள்ள "சலோமே" என்பவள், மத்தேயுவின் பட்டியலில் உள்ள "செபதேயுவின் குமாரருடைய தாய்" என்று குறிப்பிடப் படும் அதே பெண்தான் என்று சுட்டிக்காட்டும். வேறு வார்த்தைகளில் சொல்லுவதென்றால், சலோமே என்பவள் யாக்கோபுவுக்கும் யோவானுக் கும் தாயாக இருந்தாள்.

மகதலேனா மரியாள், யோவானின் முந்திய பட்டியலிலும், மத்தேயு மாற்கு ஆகியோரின் பிந்திய பட்டியலிலும் தோன்றுகிறதினால், இந்தப் பட்டியல்கள் அதே பெண்களைக் குறிப்பதாகப் பல கல்வியாளர்கள் நம்பு கின்றனர். விஷயம் இதுவாக இருந்தால், முந்திய இரு பத்திகளில் அடையப் பெற்ற முடிவை மனதில் வைத்துப் பார்க்கையில், இப்பட்டியல்களின் ஒப்பீடு ஒன்று பின்வருமாறு:

| யோவானின் பட்டியல் | மத்தேயு & மாற்குவின் பட்டியல் |
|---|---|
| இயேசுவின் தாயான மரியாள் | (காட்சியில் இருந்து கடந்துவிட்டார்) |
| இயேசுவின் தாயினுடைய சகோதரி | செபதேயுவின் மனைவியான சலோமே |
| மரியாள் கிலெயோப்பாவின் மனைவி | யாக்கோபு மற்றும் யோசேப்பு ஆகியோரின் தாயான மரியாள் |
| மகதலேனா மரியாள் | மகதலேனா மரியாள் |

"வேறே அநேக ஸ்திரீகளும்" அங்கு இருந்ததினால் (மாற். 15:41), சலோமே என்பவள் இயேசுவின் தாயான மரியாளுடைய சகோதரியா யிருந்தாள் என்ற கருத்துப் பற்றி ஒருவர் உபதேச ரீதியாக இருக்க முடியாது; ஆனால் விஷயம் இதுவாக இருந்தது என்பதற்குப் பலத்த சாத்தியக்கூறும், நிகழ்தகவும் கூட உள்ளது. வேறு ஓரிடத்தில் குறிப்பிடப்பட்டபடி, இது யாக்கோபு மற்றும் யோவான் என்ற அப்போஸ்தலர்களை இயேசுவுக்கு இனத்தாராக்கும்.

---

குறிப்புகள்

[1]J. W. McGarvey and Philip Y. Pendleton, *The Fourfold Gospel or A Harmony of the Four Gospels* (Cincinnati: Standard Publishing Co., 1914), 225. [2]Ibid.